# ஸ்ரீ ஜயாதி ஹோமம்

பொதுவாக, ஜயாதி ஹோமம் என்பது எல்லா ஹோமங்களிலும் கடைசிப் பகுதியில் செய்யப்படுகிறது. காரணம் என்னவென்றால், நாம் என்ன என்ன ஹோமங்கள் செய்தோமோ, அந்த அனைத்து ஹோமங்களின் பலன்களை அபிவிருத்தி செய்து கொடுக்கும், இந்த ஜயாதி ஹோமம். மேலும், முக்கியமாக தம்பதிகளின் ஒற்றுமையை அதிகப்படுத்தும். குடும்பத்தில் உள்ள அனைவரின் ஒற்றுமையையும் அதிகரிக்கச் செய்யும்.

இந்த காலத்தில் கூட்டு குடும்பம் என்ற ஒரு முறையே குறைந்து கொண்டும், தம்பதியர்களிடம் ஒற்றுமைகுறைந்தும் Misunderstanding அதிகரித்தும் வருகின்றது. Divorse வரை கூட போய் விடுகின்றது. இந்த ஒற்றுமையை அதிகரிக்க இந்த ஹோமம் உதவும். ஒற்றுமையாக இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்று அனைவருக்கும் தெரிந்ததே.

சில பிரிவினர்களின் திருமண சடங்குகளில் இந்த ஜயாதி ஹோமம் உண்டு. இது 58 ஆஹுதிகளைக் கொண்டது. அதாவது திருமண நாளன்றே தம்பதிகள் வாழ்நாள் முழுவதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், மணமக்கள் இரண்டு குடும்பங்களுடன் ஒற்றுமையாக எப்போதும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக இது செய்யப்படுகின்றது.

ஒரு உதாரணத்தைப் பார்ப்போம். திருப்பதி திருமலையில் வீவீம் தேவஸ்தானத்தில் தினமும் நண்பகல் 12.00 மணிமுதல் பகல் 1.00 மணிவரை ஸ்ரீ வெங்கடேச பெருமாளுக்கு திருக்கல்யாண வைபவம் நடைபெறுகின்றது. தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொள்கிறார்கள். மேலும், இந்த வைபவ நிகழ்ச்சியை TTD Channel மூலம் தினமும் live ஆக ஒளிபரப்புகிறார்கள். நாமும் தினமும் பார்க்கின்றோம். இந்த திருக்கல்யாண வைபவத்திலும் இந்த ஜயாதி ஹோமத்தில் உள்ள முதல் 9 மந்த்ரங்களை கூறி ஜயாதி ஹோமம் செய்கின்றார்கள். கடவுளுக்கு கூட இந்த பலன்கள் தேவை போல் இருக்கின்றது. அவ்வளவு விசேஷமானது இந்த ஜயாதி ஹோமம்.

**இந்த புத்தகத்தைப் படிக்கும் அனைவருக்கும் நாங்கள் விடுக்கும் ஒரு முக்கியமான விண்ணப்பம் என்னவென்றால்,** வீட்டில் உள்ள பெரியவர்கள் அனைவரும் தன்னுடைய சந்ததியர்கள் அனைவரையும் இந்த ஹோமங்களில் கலந்து கொள்ள சொல்ல வேண்டும். குடும்ப ஒற்றுமைமிகவும் முக்கியம். குடும்பத்தில் உள்ளவர்களிடம் சண்டைகளும், சச்சரவுகளும், பொறாமைகளும் இருக்கும் வரை குடும்ப முன்னேற்றமும், ஒவ்வொருவருடைய தனிப்பட்ட முன்னேற்றமும் தடைபடும். பல பிரச்சனைகள் வரும். வீட்டில் உள்ள வயதானவர்கள் மற்றும் மதிப்பிற்குரியவர்கள அனைவரின் நிம்மதியும் குறையும்.

எவ்வளவு சொத்தும், பணமும், வசதியும், பதவியும், பட்டமும் இருந்தாலும், குடும்பத்தில் ஒற்றுமைகுறைந்தால் நிம்மதி பறிபோய்விடும். குடும்ப ஒற்றுமையை பலப்படுத்துதல் பெரியவர்களின் முக்கிய கடமைஆகும். அதனால் தான் இந்த ஹோமங்களில் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் கலந்து கொள்ள சொல்கிறோம்.

மேற் சொன்ன காரணங்களால், இந்த ஜயாதி ஹோமம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மிகவும் தேவையான ஒன்று.

தேவைப்படுபவர்களுக்கு இந்த அனைத்து ஹோமங்களையும் தங்கள் வீட்டிற்கே வந்தும் செய்து கொடுக்கின்றோம். விருப்பமுள்ளவர்கள் குருஜியை தொடர்பு கொள்ளவும்.